உறுதி செய்யப்பட்டவுடன், அந்தப் பகுதி ஏழை, எளிய மக்களுக்கு படிப்படியாக தரமான, உறுதியான வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(ஆ) எழும்பூர் தொகுதி, மறுகட்டுமானம் செய்யப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை பயனாளிகளுக்கு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77–வது வட்டத்தில் சுமார் 1,536 வீடுகள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அவற்றில் 672 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமிருக்கின்ற 864 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. அதுகுறித்து விசாரித்தபோது, அவற்றுக்கு இன்னும் கழிவுநீர் இணைப்பும், குடிநீர் இணைப்பும் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 300–க்கும் மேற்பட்ட ஏழை மக்கள், அந்தக் கட்டடப் பணிகள் நடைபெற்றுவருகின்ற இடத்திற்கு அருகில் இருக்கின்ற மணற்பாங்கான இடங்களில் தகரத்தினால் வேயப்பட்ட கூரை வீடுகளை அமைத்து, குடியிருந்து வருகிறார்கள். மழைக் காலத்திற்கு முன்பே அந்த மக்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

அதேபோல 77–வது வட்டத்திலுள்ள பி.கே. காலனியில் 1, 3, 9 ஆம் பிளாக்குகளில் உள்ள வீடுகள் பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தைப்போல சாய்ந்த நிலையில் உள்ளன. மழைக் காலத்தில் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன்பாக தாங்கள் அந்த இடத்தை ஆய்வு செய்து, அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற நிதியாண்டிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தினேன். அதிகாரிகள் அந்த இடத்தை வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். சென்றவர்கள் சென்றவர்கள்தான். இதுவரை அந்தப் பணிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பது தெரியவில்லை.

அதேபோல, எழும்பூர் தொகுதி, 104–வது வட்டத்தில் ஆர்.கே. புரம், 61–வது வட்டத்தில் சந்தோஷ் நகர் ஆகிய இரண்டு

பகுதிகளில் உள்ள குடிசைகளையும், பழைய வீடுகளையும் இடித்துவிட்டு, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் புதிய வீடுகள் கட்டுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். கே.பி. பார்க் பகுதியில் புதியதாக 672 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஏழைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. புதியதாகக் கட்டப்பட்ட அந்த இடத்தில் கழிவுநீர் செல்லக்கூடிய குழாய்கள் அனைத்தும் இடிந்து விழுந்துள்ளதால், கழிவு நீர் இரண்டு பிளாக்குகளுக்கிடையில் தேங்கி நிற்பதால், அங்கு வசிக்கக்கூடிய மக்களுக்கு பல்வேறு தொற்று நோய்கள் வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று, கே.பி. பார்க்குக்கு அருகில் வீடற்றவர்களுக்கு புதியதாக வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அந்தப் பகுதியிலேயே வசிக்கக்கூடிய ஏழைகளுக்கு அந்த வீடுகளை இலவசமாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், அதிகாரிகளிடம் விசாரித்தபோது, வீடற்றவர்களுக்கு ரூ.10 இலட்சம், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் அந்த வீடுகளை ஒதுக்கப்போவதாகத் தெரிவிக்கிறார்கள். எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், 58–வது வட்டத்தில் Home for the homeless என்ற இடத்தில் வசிக்கக்கூடிய சுமார் 175 ஏழைக் குடும்பங்கள் மற்றும் மூர் மார்க்கெட் பகுதியில் வசிக்கக்கூடிய சுமை தூக்கும் தொழிலாளிகள், பிளாட்பாரத்தில் வசிக்கக்கூடிய மக்கள் ஆகியோருக்கு அந்த வீடுகளை இலவசமாக ஒதுக்கித் தர வேண்டும். எழும்பூர் பகுதியில் வசிக்கக்கூடிய வீடற்ற ஏழை மக்கள், ஸ்டிங்கர் சாலையில் வசிக்கக்கூடிய மக்கள் போன்ற பலதரப்பட்ட மக்களுக்கும் அந்த வீடுகளை இந்த அரசு இலவசமாக ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அதற்கு வழி கண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். கொட்டும் மழையும் கூரையின் உள்ளே கொட்டுகிறது, கோடை வெயிலும் அடிக்கிறது. இந்த நைந்துவிட்ட கூரையை மாற்றுவதற்கு நல்ல வழி பிறக்காதா என்று ஏங்கி நின்ற ஏழைகளுக்கு, கூரையை மாற்ற வேண்டாம், குடிசையையே மாற்றுவோம் என்றும், குடிசையை மாற்றுவோம் என்றால், வேறொரு குடிசைக்கு மாற்றுவோம் என்று அர்த்தம்

[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்] [2019 ஜூலை 9

அல்ல; குடிசைகளுக்கு பதிலாக குடியிருப்புகளைக் கட்டுவதற்கு குடிசை மாற்று வாரியத்தை 1969 ஆம் ஆண்டு தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளை குடிசைகளில் வசித்துக் கொண்டிருப்பவர்களுக்கே இலவசமாக வழங்க வேண்டுமென்று இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வற்புறுத்தி, அமைகின்றேன்.

4. தகவல் கோரலில் ஒரு பொருள் குறித்து மட்டுமே கவனத்தை ஈர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே உறுப்பினர்கள் இந்த அவையின் கவனத்தை ஈர்க்கின்றபொழுது, ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றியோ, ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றியோ பேசுவதுதான் நடைமுறையாக இருந்தது. இப்போது, உறுப்பினர்கள் தொடர் பேச்சாக பேசிக் கொண்டேயிருக்கின்றார்கள். ஆகவே, அவர் முதலில் கேட்ட பொருளில் கவனம் சிதற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தப் பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ, அந்தப் பொருள் பற்றி மட்டும் பேசினால், நாங்கள் பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றிரண்டுகூட சொல்லலாம். ஆனால், மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் இழுத்துக்கொண்டே போனால், அது நல்ல நடைமுறை அல்ல.*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது அந்த நிகழ்வைச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொன்னால் போதும். ஆனால், மாண்புமிகு*